சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.133/2022

வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு. சூர்யராஜகுமார் | த/பெ: | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | முகவரி: | |
| தேதி: | 19.03.2025 | தாலுக்கா: | |

முதல் விசாரணை ..

நான் தற்போது திருவாரூர் கனரா வங்கியில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் வங்கியில் ராமு, த/பெ. நல்லுசாமி என்பவருக்கு கணக்கு உள்ளது. அவரது கணக்கு எண்.63802200027599. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தை எங்கள் வங்கியில் பணம் வாங்க 27.05.2022 ல் செலுத்தியுள்ளார். வா.சா.ஆ.3 ஆவணம் எங்கள் வங்கியால் வழங்கப்பட்டதுதான். வா.சா.ஆ.3 ஆவணம் 30.05.2022 ல் ராமு என்பவருக்கு வழங்கப்பட்டது. காசோலை வழங்கிய நபரின் கையொப்பம் தவறாக உள்ளது என்று திருப்பப்பட்டுள்ளது. அதே வா.சா.ஆ.1 ஆவணத்தை எங்கள் வங்கியில் மீண்டும் 03.08.2022 அன்று பணமாக்க செலுத்தியுள்ளார். அதன்பேரில் 04.08.2022 ல் எங்கள் வங்கியால் வா.சா.ஆ.5 ஆவணம் வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தின் பேரில் போதிய பணமில்லை என காசோலை திருப்பப்பட்டுள்ளது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது திருவாரூர் வடக்கு வீதியில் உள்ள கனரா வங்கியில் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். நான் திருவாரூர் வங்கி கிளையில் 21.05.2023 ல் பணிக்கு சேர்ந்தேன். அதற்கு முன்பு என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.1 காசோலையை முதலில் எங்கள் வங்கியில் 27.05.2022 அன்று பணமாக்க செலுத்தப்பட்டுள்ளது. அந்த காசோலை 30.05.2022 அன்று கையெழுத்து மாறுபட்டு இருப்பதாக (Signature defer) திருப்பப்பட்டுள்ளது. ஒரு காசோலை வங்கியால்

திருப்பப்பட்டுள்ளது அந்த காசோலை மீண்டும் வங்கியில் வசூலுக்காக போட இயலாது என்றால் சரியல்ல. நான் வங்கி சட்ட திட்டங்களை முழுமையாக தெரிந்துக்கொள்ளாமல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு ராமுவும் அவரது மனைவியும் என்னை வந்து பார்த்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் என்னை வந்து பார்த்ததால் வங்கி சட்டத்திற்கு முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.